Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
| --- | --- | --- |
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 4 ம் நாள் ஸபர் 6 (17-6-64) புதன்கிழமை இதழ் 129

# 'கட்டாய ஓய்வை வாபஸ்பெற உதவுக'

# நிதிமந்திரிக்கு அரசாங்கசேவை ஊழியர் வேண்டுகோள்

## "பாரபட்ச நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்"

கொழும்பு, செவ்வாய்

அரசகரும மொழிச்சட்டத்தால் அரசாங்க சேவையில் கடமையாற்றும் பல ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்க்கும் வகையில் இதுவிஷயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவை ஊழியர்களின் பலம் வாய்ந்த அரசாங்கசேவை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவிடம் இன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த தொழிற்சங்க சம்மேளனம் அவசர வேண்டுகோளாக நிதிமந்திரியிடம் எடுத்துக்கூறியுள்ளதாவது:

அரசாங்க சேவையில் கடமையாற்றும் ஊழியர்கள் மத்தியில் காட்டப்படும் பாரபட்சம் நிறுத்தப்படுவதற்கு ஒழுங்குகளை நிதிமந்திரி மேற்கொள்ளவேண்டும். இவ்வித பாரபட்சம் மிகவும் கடுமையானதும் அநீதியானதுமாக இருக்கிறது.

கேடு விளைவிக்கக்கூடிய சகல உத்தரவுகளையும் தள்ளுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்வதோடு அரசாங்க சேவையில் நம்பிக்கை ஏற்படக்கூடிய வகையில், மொழி மாற்றத்தைத் தொடர்ந்து திறைசேரியால் எடுக்கப்பட்டுள்ள சகல தண்டனை நடவடிக்கைகளையும் நீக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

# ஜப்பானில் கடும் பூமி அதிர்ச்சி

## பாலங்கள் சரிந்தன; வீடுகள் நொருங்கின

டோக்கியோ, ஜூன் 16

வடஜப்பானில் நிகாட்டா என்ற கரையோரப்பட்டினத்தில் கடும் நிலஅதிர்ச்சி ஏற்பட்டதால் பல பாலங்களும், வீடுகளும் சரிந்தன. பலஇடங்களிலும் தீவிபத்து ஏற்பட்டதுடன் கடல்வெள்ளம் பட்டினத்தில் பிரவேசித்தது. இந்தப் பட்டினத்தின் ஜனத்தொகை மூன்றரை லட்சம்.

16 குழந்தைகள் புதையுண்டன என்றும் இதில் ஒரு குழந்தை மீட்கப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. குறைந்தது 12 பேர் பலியாகியிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

பாதைகள், பாலங்கள் சரிவு காரணமாக டோக்கியோவிலிருந்து வடமேற்கே 90 மைல் தூரம்வரை ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. 1923-ம் ஆண்டுக்குப்பின் ஜப்பானில் இவ்வளவு பெரிய நிலஅதிர்ச்சி ஏற்பட்டதில்லை என அறிவிக்கப்படுகிறது.

## வெப்பத்தின் கொடுமை

இராமநாதபுரம், செவ்.

கிளிநொச்சிப்பகுதியில் வெப்பம் தாங்கமுடியாமலிருப்பதால் சிறுபோக வேளாண்மை வாட்டமுறுகின்றன. அளவுக்கு அதிகமான வெய்யிலின் காரணமாக இரணைமடுக் குளத்தில் தண்ணீர் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இவ்வெப்பத்தின் கொடுமையைத் தாங்கமுடியாத குடியேற்றவாசிகள் ஆலயங்களுக்கு அபிஷேகம் செய்து வருகிறார்கள்.

# மன்னார் பகுதியில் மீண்டும் இராணுவத் தாக்குதல்

## மூவர் ஆஸ்பத்திரியில்!

மன்னார், செவ்வாய்

சிலாபத்துறைபகுதியிலுள்ள கொக்குப்படையான் என்ற கிராமத்தில் சிலதினங்களுக்கு முன் இராணுவத்தினர் சிலர் அங்குள்ள வீடுகளுக்குள் நள்ளிரவில் புகுந்து ஆண்களை கடற்கரைக்கு இழுத்துச் சென்று கடுமையாகத் தாக்கியதாகவும் 'சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள்' என ஒப்புக் கொள்ளும்வரை அவர்களை மிருகத்தனமாகத் தாக்கியதாகவும் இவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம்பற்றி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மன்னார் மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். ஆர். எம். வேலுசாமி அவசரத் தந்தியொன்றையும் மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளார். பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல், மன்னார் உதவிப்பொலிஸ் சுப்ரின்டெண்ட், மன்னார் எம். பி. ஆகியோருக்கும் இச்சம்பவம்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குப்படையான் கிராமத்திலுள்ள சில வீடுகளில் இராணுவத்தினர் புகுந்து அங்குள்ள ஆண்களைக் கடற்கரைக்கு இழுத்துச் சென்று கடுமையாகத் தாக்கியதைத் தொடர்ந்து குழந்தைகளும் பெண்களும் பீதியடைந்துள்ளனர். இவர்களில் பலர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளானவர்கள் எல்லோரும் மன்னார் பொலிஸ் அதிகாரி நடத்திய விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத் தாக்குதலினால் காயமடைந்த லெட்சுமணன், கண்ணையா, இருளாண்டி ஆகிய மூவரும் ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்த உத்தரவிடுமாறு நிரந்தரக் காரியதரிசியை திரு. வேலுசாமி கோரியுள்ளார்.

## கலாசார விஞ்ஞான உடன்படிக்கை

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக்கும் ருஷ்யாவுக்குமிடையில் கலாசார விஞ்ஞான உடன்படிக்கை ஒன்று இன்று மாஸ்கோவில் கைச்சாத்திடப்பட்டது.

# ஜூலை 2-ல் பார்லிமெண்ட் கூடுகிறது

## ஆசனங்களை அங்கத்தவர் மாற்றிக்கொள்வார்கள்

கொழும்பு, செவ்வாய்

இன்று காலை ஜனப்பிரதிநிதிகள் சபையிலுள்ள சபாநாயகர் அறையில் கூடிய கட்சித் தலைவர்கள் பார்லிமெண்டை அடுத்த மாதம் 2-ம் திகதி கூட்டுவதெனத் தீர்மானித்தனர்.

இம்முறை பார்லிமெண்ட் கூடும்போது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கும் ஆசனங்களில் அமர்வார்கள்.

எதிர்க்கட்சிக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் இரண்டாவது வரிசையில் அமரும் திரு. பீட்டர் கெனமன் முன் வரிசையில் டாக்டர் கொல்வின் அமரும் ஆசனத்தில் அமருவார்.

கடைசி வரிசையில் உள்ள ஆசனத்தில் அமரும் திரு. கே. எம். பி. ராஜரத்தின முன் வரிசையில் டாக்டர் என். எம். பெரேரா அமர்ந்துவந்த ஆசனமொன்றில் அமருவார். இவ்வித மாற்றம் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களையும், ஜாதிக விமுக்தி பெரமுனை அங்கத்தவர்களையும் பக்கத்தே அமரச் செய்யும். தமிழரசுக் கட்சித் தலைவர், திரு. ராஜரத்தினவின் பக்கத்தில் அமருவார். இரு கட்சியினருக்கும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஆச

(6-ம் பக்கம் பார்க்க)

# லண்டனில் சிறிமா — சாஸ்திரி பேச்சு

## இலங்கை தூதர் தகவல்

சென்னை, ஜூன் 16

இலங்கைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் சந்திக்கும் போது இலங்கை—இந்தியர் பிரச்னைகள்பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு சேர்லி அமரசிங்கா நேற்று சென்னையில் கூறினர்.

இந்தியாவிலுள்ள சிலர் இலங்கைக்கு இந்தியர்களை கடத்திச் செல்லும் தொழிலில் இறங்கியுள்ளார்களென்றும், அப்படிப்பட்டவர்கள் இத்தொழிலின் மூலமே தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்களென்றும் திரு. அமரசிங்கா மேலும் கூறினர்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

1954-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு இலங்கையைப் பொறுத்தவரையில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அப்படியான திட்டத்தைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

## மணிவாக்கு

பலாத்கார சகாப்தம் முடிந்து விட்டதென்றோ, சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்றோ யாரும் கூறமுடியாதென்று நினைக்கிறேன். என்றுமில்லாத வேகத்துடன், அளவற்ற அழிவுச் சக்தியுடன் அது இன்று தலைவிரித்தாடுகிறது. ஒன்று அது அழியவேண்டும், அல்லது உலகத்தின் பெரும் பகுதியை அது அழித்துவிடும்.

—ஜவஹர்லால் நேரு.

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி மீ 4 உ (17-6-64)

## செப். 17-ல் பொது விடுமுறை

கொழும்பு, செவ்வாய்
அனகாரிக தர்மபாலாவின் நூற்றாண்டு தினமான செப்டம்பர் 17-ம் திகதியை பொது விடுமுறையாக ஸ்தலஸ்தாபன மந்திரி பிரகடனம் செய்திருக்கிறார்.

## விசாரணை வேண்டும்

கூட்டு அரசாங்கம் வெளியிட்ட பதினன்கு அம்சத் திட்டத்தில் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைக்கு இப்பொழுதுள்ள சட்ட விதிகளுக்கமைய பேச்சு வார்த்தைகள் மூலம் விரைவில் தீர்வு காணப்படவேண்டுமென்று ஒரு அம்சம் கூறுகிறது. ஆனாலும் அரசாங்கத்தின் திட்டத்தைப் பற்றியோ நடவடிக்கைகளைப் பற்றியோ இராணுவத்தினர் சிலர் கவலைப்பட வில்லை போலும். பலாத்காரம் மூலம் இந்திய வம்சாவளியினர் பிரச்னையையும் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்னையையும் தாங்களே தீர்த்துவிடமுடியுமென்று அவர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது. மன்னாரில் சிலாபத்துறையில் கொக்குபடையான் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன் அட்டகாசம் புரிந்ததாக கிடைத்துள்ள செய்தி இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காக இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளில் காவல் புரிய நிறுத்தப்பட்டுள்ளனர். சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டியதுதான். இதை யாரும் ஆட்சேபிப்பதற்கு இடமில்லை. ஆனல் இலங்கையிலேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் மக்களை வீடு புகுந்து இம்சைப்படுத்துவது அக்கிரமம். கொக்குபடையான் என்ற கிராமத்தில் இம் மாதம் 12-ந் திகதி நள்ளிரவில் சில இராணுவத்தினர் வீடுகளுக்குள் புகுந்து அங்குள்ள ஆண்களை வலுக்கட்டாயமாக கடற்கரைக்கு இழுத்துச் சென்று அவர்களை மிருகத்தனமாகத் தாக்கியதாகவும் சட்டவிரோதமாகக் குடியேறியதாக ஒப்புக்கொள்ளுமாறு நிர்ப்பந்தித்ததாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மன்னார் மாவட்ட பிரதிநிதி, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு முறையிட்டிருக்கிறார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கிராமவாசிகள் பொலிஸ் அதிகாரி நடத்திய விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டிருப்பது கவனத்துக்குரியது. இராணுவத்தினரால் தாக்கப்பட்டவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

உண்மையில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாக இருந்தாலும் அவர்களைக் கைது செய்து பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டும். அதுதான் நியாயம். இதை விடுத்து இராணுவத்தினர் அவர்களை மிருகத்தனமான முறையில் தாக்கியிருப்பது இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாகும். இவ்வித செயல்களை இனியும் அனுமதிப்பது 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரர்களாக' அனுமதிப்பதாகும். அதன் விளைவு நிச்சயம் நிலைமையை மோசமாக்கும்.

சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை என்ற போர்வையில் இராணுவத்தினர் சிலரும் பொலிஸார் சிலரும் மிருகத்தனமாக நடந்துகொண்டிருப்பது இதுதான் முதல் தடவையல்ல. இராணுவத்தினரினதும் பொலிசாரினதும் சட்டவிரோத அட்டகாச நடவடிக்கைகளைப் பற்றி பார்லிமெண்டிலும் மக்கள் பிரதிநிதிகள் பலர் பலதடவைகளிலும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். நாமும் இப்பத்தியில் இதற்கு முன்னரும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆனல் மேலதிகாரிகள் உரிய நடவடிக்கைஎடுத்து தவறுசெய்தவர்களைச் சரியான முறையில் தண்டித்ததாகத்தெரியவில்லை. தவறு செய்தவர்கள் சரியான முறையில் தண்டிக்கப்பட்டிருந்தால் மேலும் மேலும் இவ்வித சம்பவங்கள் நடைபெறுவதற்கு இடமிருக்கமாட்டாது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கமும் தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இலங்கை-இந்திய அரசாங்க அதிகாரிகளும் இதுசம்பந்தமாக இடையிடையே ஆலோசனை செய்துவருகின்றனர். இதே சமயம் இலங்கை அரசாங்கமும் அடையாள அட்டைகள் வழங்குவது போன்ற முயற்சிகளையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் இராணுவத்தினர் சட்டவிரோதமானமுறையில் இந்நாட்டு மக்களை மிருகபலத்தால் அடக்கியாள முற்படுவது அரசாங்கத்தின் கொள்கைக்கும் மனிதாபிமானத்துக்கும் முரணனதாகும்.

கொக்குப் படையான் கிராமத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் அதிகாரியின் விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இதிலிருந்து இராணுவத்தினரின் செயல் தவறு என்பது தெளிவாகிறது. இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைபற்றி உடனடியாக விசாரணை செய்து தவறுசெய்தவர்களைத் தண்டிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

# 1096 கி. மு. சங்கங்கள் புனரமைப்பு செய்யப்பட்டன

## 1962-63-ம் ஆண்டு நிர்வாகஅறிக்கைவிபரம்

கொழும்பு, செவ்வாய்
"சென்ற நிதிவருட இறுதியில் ஆண்களுக்கான 5786 கிராம முன்னேற்றச் சங்கங்களும், பெண்களுக்கான 1692 கிராம முன்னேற்றச் சங்கங்களும் இயங்கின. செயல்திறமற்ற பலவீனமான சங்கங்களை புனரமைப்புச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இங்ஙனம் புனரமைப்புச் செய்யப்பட்டவை 1096 சங்கங்கள். இவற்றில் ஆண்களுக்கான கிராம முன்னேற்றச் சங்கங்கள் 224. இந்தச் சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் அடிப்படையாயிருந்தது சிரமதான இயக்கமே."

இவ்வாறு கிராம முன்னேற்றம், சிறுகைத்தொழில்கள் பகுதி நிர்வாகத் தலைவர் தனது 1962-63-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் புள்ளி விபரத் திட்டத்தின்படி கொழும்பைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் சிறுகைத்தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளமை புலனாகிறது. கொழும்பில் 620 சிறுகைத்தொழில் நிலையங்கள் உள்ளன இரண்டாவது அதிகப்படி சிறுகைத்தொழில் நிலையங்களைக் கொண்டதாகக் கருதப்படும் யாழ்ப்பாணமாவட்டத்தில்46சிறுகைத்தொழில் நிலையங்களே உள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் சிறுகைத்தொழில் நிலையங்களின் வளர்ச்சி ஏமாற்றம் தருவதாகவே உள்ளது. வவனியா மாவட்டத்தில் எந்தவிதமான சிறுகைத்தொழிலும் நடைபெறவில்லை. மன்னாரில் சிறுகைத்தொழில்கள் நடைபெறுகின்றன. மட்டக்களப்பில் 1சிறுகைத்தொழில் மட்டும் வளர்ந்து வருகிறது. திருக்கோணமலையில் 3 சிறுகைத்தொழில் நிலையங்கள் உள்ளன.

குடிசைக் கைத்தொழில்களையும், சிறுகைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்காக இந்த ஆண்டில் ரூபா 20,91,644 கடனாக உதவப்பட்டுள்ளதென்றும் முந்திய நிதி வருடங்களில் ரூபா 7,42,255 மட்டுமே கடனாக உதவப்படுவது வழக்கம் என்றும் இந்த அறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமசமாஜ மந்திரிகளுக்கு ஆலோசகர்கள்

கொழும்பு, செவ்.
மூன்று சமசமாஜ மந்திரிகளுக்கும், கட்சியின் முக்கிய அங்கத்தினர்கள் ஆலோசகர்களாக இருக்க வேண்டும் என சமசமாஜக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

தகவல் மந்திரி திரு. அனில் முனசிங்காவுக்கு டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவும், மராமத்து மந்திரி சம்னி குணவர்த்தனவுக்கு திரு. லெஸ்லி குணவர்த்தனவும், நிதி மந்திரி டாக்டர் பெரேராவுக்கு திரு. பெர்னர்ட் சொய்ஸாவும் ஆலோசகர்களாக இருப்பர்.

## பளையில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலை

பளை, செவ்.
"பளை மக்களின் முன்னேற்றத்திற்கு இவ் ஆயுர்வேத வைத்தியசாலை முக்கியமானதொன்று. ஆகவே இதை அழியவிடாது பாதுகாப்பது நமது கடமையாகும்."

இவ்வாறு பளை கிராம சபைக் காரியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலையைத் திறந்து வைத்துப் பேசிய பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி திரு. வ. கந்தசாமிப்பிள்ளை குறிப்பிட்டார்.

புலோப்பளை கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர் புதிய கிராமசபைக் கட்டடத்தின் அடிக்கல்லைநாட்டி வைத்துப் பேசுகையில், 15,000 ரூபா செலவில் பளை கிராம சபைக்கான புதிய கட்டடத்தைக் கட்டத் திட்டமிட்டுள்ளோம். இதற்குப் பொது மக்களின் உதவி மிகவும் அவசியமென்றார்.

திரு. செ. சேனதிராசா, திரு. செ. சரவணமுத்து, திரு. சே. சேதுகாவலர் ஆகியோரும் பேசினர். அமெரிக்க தகவல் ஸ்தாபனத்தினரால் ஒரு படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

## கிராம முன்னேற்றச் சங்க வருடாந்த விழா

யாழ்ப்பாணம், செவ்.
"இச் சங்கம் பல முன்னேற்றமான வேலைத் திட்டங்கள் செய்வதையிட்டும், சமூக முன்னேற்றத்துக்காக உழைப்பதையிட்டும் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் கோண்டாவில் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் நடைபெற்றது.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை, காரியதரிசி: கே. பி. சுந்தரலிங்கம், உப தலைவர்: மு. தர்மலிங்கம், தனாதிகாரி: வ. சின்னராசா, 7 அங்கத்தவர்கள் கொண்ட கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## வீர விநாயகர் ஊர்வலம்

பளை, செவ்.
பளை இரட்டைக்கேணி இராஜ ராஜேஸ்வரி ஆலயத்திலிருந்து ஆரம்பமான வீர விநாயகர் ஊர்வலம் பிரதான வீதிகள், கிராமங்கள் வழியாக சென்று கோவிலை வந்தடைந்தது. தவத்திரு சிவகுரு அடிகளால் 'பக்தியின் பெருமை' என்னும் பொருள் பற்றி பிரசங்கமொன்று நடைபெற்ற பின்னர் விழா பூர்த்தியானது.

## மீசாலையில் புதிய வாசிகசாலை

கொடிகாமம், செவ்.
ஏழைமக்களின் அறிவைப் பெருக்குவதற்கு இதுபோன்ற வாசிகசாலைகள் மிகவும் அவசியமென்று மீசாலை நகரசபை அங்கத்தவர் திரு. அ. கனகரத்தினம் மீசாலையில் புதிய வாசிகசாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வாசிகசாலைக்கு 'விஜயகர் வாசிகசாலை' என்ற பெயரைச் சூட்டி, 'ஈழநாடு' பத்திரிகையையும் வாசித்து வாசிகசாலையைத் திறந்து வைத்தார்.

## மன்னாரில் சிறந்த கபே

மன்னார், செவ்வாய்
மக்கள் சுகாதாரவாரத்தையொட்டி மன்னார் பட்டினசபையினரால் நடாத்தப்பட்ட போட்டியில்தேநீர்க்கடை, சாப்பாட்டுக் கடைகளில் சிறந்ததாகவும் சுகாதாரக் கட்டுப்பாட்டுக்கமைந்ததாகவும் முறையே முதலாம் இரண்டாம் பரிசுகளை மன்னார் 'கலாவதி கபே' பெற்றுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு

## ஜூன் சம்பளம் 24-ம திகதி கிடைக்கும்

கொழும்பு, செவ்.
அரசாங்க ஊழியர்களுக்கு போசன் பண்டிகையான வருகிற 24-ம் திகதிக்கு முன் ஜூன் மாதச் சம்பளத்தை வழங்குமாறு நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா உத்தரவிட்டிருக்கிறார்.

## கிருமிநாசினி ஆபத்து

இராமநாதபுரம், செவ்.
கிளிநொச்சியைச் சேர்ந்த இராமநாதபுரம் குடியேற்றத் திட்டத்தில் கடந்த சில காலமாக கிருமிநாசினி எமனாக மாறிப் பல உயிர்களை தனக்கு பலியாக்கிக் கொண்டு வருகிறது. சிலர் தங்கள் எதிரிகளின் வீட்டு நாய், கோழிகளுக்கு உணவுடன் இதைக் கலந்து கொடுக்கிறார்களாம். அண்மையில் மணியம் என்பவருக்குச் சொந்தமான 15க்கு மேற்பட்ட கோழிகளும் இரு வேட்டை நாய்களும் கிருமி நாசினி கலந்த உணவை அருந்தி இறந்து கிடந்தன. இதுபற்றி மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

# உத்தியோகம் கிடைக்காததால் இளைஞன் தற்கொலை

அல்லைப்பிட்டி, செவ்
மண்டைதீவைச் சேர்ந்த இராமநாதன் பரஞ்சோதி (வயது 24) கிருமி நாசினி அருந்தி மரணமானர்.

அல்லைப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அ. வல்லிபுரநாதன் மரணவிசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் தாயார் தெய்வானை சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

காலஞ்சென்ற பரஞ்சோதி எனது நாலாவதுமகன். தனது மூத்த சகோதரர்கள் அனைவரும் உத்தியோகம் பார்க்கின்றனர். தான் மட்டும் படித்தும் பயனற்றவனாக, விவசாயத்தைச் செய்யவேண்டியிருக்கிறதே என்று அவர் அடிக்கடி என்னிடம் சொல்லிக் கவலைப்படுவார். தான் இந்த உலகத்தில் வாழவிரும்பவில்லை என்று அவர் கூறிவந்தார். சம்பவம் நடந்த அன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சியில் இருந்து வீட்டிற்கு வந்தார். தனது பிரயாண உடுப்பைக் கழற்றிவிட்டு வெளியில் சென்றார். பின் பதினைந்து நிமிடத்தில் திரும்பிவந்து "அம்மா ஒரு முறை முத்தம் கொடு" என்று கேட்டார். நான் அருகில் சென்று கட்டிமுத்தம் கொடுத்ததும் அவர் வாயில் பொலிடோல் மணம் வீசியது. நான் கதறினேன். அயலில் உள்ள ஞானம்பிகை மற்றும்பலர் வந்தனர்.

மரணவிசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணைக்கு சாட்சி கூறியதாவது:-

எங்களுக்கு முரசுமோட்டை என்னும் பகுதியில் கமம்உண்டு. அங்கே எனது கணவன் இருந்தார். அங்கேயிருந்துதான் கிளிநொச்சி வழியாக காலஞ்சென்றவர் வந்தார். அவர் எனது செல்லப்பிள்ளை 'முத்தம் கொடு அம்மா' என்று அவர் என்னை அடிக்கடி கேட்பது வழக்கம்.

ஆசிரியை ஞானம்பிகையும் சாட்சியமளித்தார்.

'விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படும் இப்பொலிடோல் மக்களின் வாழ்க்கை முடிவுக்கும் பயன்படுகின்றது. ஓர் ஆண்டில் இக்கிருமி நாசினிக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் பலியாகிவருகின்றனர். தற்பொழுது தற்கொலைகள் அதிகரிப்புக்கு இதுவேதான் காரணம். எனவே இப்பேராபத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற இறக்குமதித் தடை விதிக்க முடியாவிட்டாலும் இதை இலகுவில் பெறமுடியாத அளவிலாவது அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்' என்று மரண விசாரணை அதிகாரி திரு அ. வல்லிபுரநாதன் குறிப்பிட்டுதற்கொலையெனத் தீர்ப்புக்கூறினர்.

# சுப்பிரமண்யத்தின் இலாகா மாற்றம்

## அண்ணுதுரை கருத்து

சென்னை, ஜூன் 16

தி. மு. க. தலைவர் அண்ணுதுரை நிருபர்களிடையே பேசுகையில் திரு. சுப்ரமண்யத்தின் இலாகா மாற்றம்பற்றி கருத்துத் தெரிவித்தார். நல்ல, மலிவான விலையில் உணவு கிடைக்கும் என்று நன்றி தெரிவித்தார்.

இலாகா மாற்றம் காரணமாக சேலம் உருக்குஆலைத் திட்டம் கைவிடப்படும் எனத் தாம் கருதவில்லையென்றும் இலாகா மாற்றத்துக்கு உள்நோக்கம் எதுவும் இருக்குமெனத் தாம் நினைக்கவில்லை என்றும் அண்ணுதுரை கூறினுர்.

பர்மாவிலுள்ள தமிழர்களின் கஷ்டங்களைப் போக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்காதது தமக்கு ஏமாற்றம் அளிப்பதாயும் எனினும் புதியதூதர் இவ்விஷயம்பற்றி மத்திய அரசாங்கத்துடன் விவாதிப்பார் என நம்புவதாயும் அவர் கூறினுர்.

# சாஸ்திரி திறமைசாலி

## நியூயோர்க்கில் அமெரிக்க தூதர் பவுல்ஸ் பேட்டி

நியூயோர்க், ஜூன் 16

"சாஸ்திரி ஒரு திறமை வாய்ந்த தலைவர் எனக் கருதுகிறேன். தன் விருப்பம் என்ன என்பதை நன்கு அறிந்து, மற்றவர்களையும் தம்முடன் சேர்த்து வேலை செய்ய வைக்கும் திறன்படைத்த திடசாலி அவர் பலதரப்பட்ட கருத்துக்களைச் சரிக்கட்டிக் கொண்டு போகக் கூடியவர்" என டில்லியிலுள்ள அமெரிக்கதூதர் திரு. செஸ்டர்பவுல்ஸ் நியூயோர்க்கில் நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினுர்.

"நேரு மறைவையடுத்து 4 தினங்களுக்குள் புதிய அரசாங்கம் ஏற்பட்டிருப்பது ஜனநாயகத்துக்கு ஒரு வெற்றியாகும்" என்றும் அவர் கூறினுர்.

"ரஷ்யா சம்பந்தமாக கோஷ்டி செராமலிருந்துவரும் கொள்கையில் மாறுதல் ஏற்படும் சாத்தியக்கூறு இருப்பதாக நான் கருதவில்லை. ரஷ்யாவுடனுள்ள உறவுமுறையில் அபிவிருத்தி காண அமெரிக்கா முயன்றுவரும்போது அதே காரியத்தை ஏன் செய்யக்கூடாது என டில்லி அரசாங்கம் என்னைக் கேட்டது. ஆனல் சீனவைப் பொறுத்தவரை அது ஓர் ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்த விஸ்தரிப்பு மோகம் பிடித்த ஒரு நாடு என அவர்கள் கருதுகிருர்கள்" என்றும் திரு. பவுல்ஸ் குறிப்பிட்டார்.

# 'வலதுசாரி, இடதுசாரி எதுவும் இல்லை'

## 'பிராவ்டா' பத்திரிகைக்கு பட்டீல் பதில்

பம்பாய், ஜூன் 16

புதிய இந்திய அரசாங்கத்தில் வலதுசாரி, இடதுசாரி, மையக் கோஷ்டி போன்றவை எதுவுமே கிடையாது என ரயில்வே மந்திரி பட்டீல் இங்கு கூறினுர்.

கொள்கைகளை வகுப்பதில் தேச நன்மை நலன் ஆகியவையே பிரதான நோக்கம் என்றும் இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய பட்டீல் தெரிவித்தார்.

நிதி ரயில்வே ஆகிய இரு இலாகாக்கள் இன்றும் பிற்போக்கு வட்டாரங்களுடன் சம்பந்தப்பட்டவர்களிடம் இருப்பதாக, சாஸ்திரி மந்திரி சபைபற்றி ரஷ்ய பத்திரிகை 'பிராவ்டா' கூறியிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பட்டீல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெருக்கடிகாலத்தில் தங்கள் வேறுபாடுகளைத் தீர்த்து ஒன்றுபட்டு செயல்பட இந்தியமக்கள் கற்றுக்கொண்டிருப்பதாயும் பட்டீல் கூறினுர்.

### கிரேக்க பிரதமருக்கு ஜோன்சன் அழைப்பு

வாஷிங்டன், ஜூன் 16

சைப்பிரஸ்பற்றிப் பேச வாஷிங்டனுக்கு வருமாறு அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் கிரேக்க பிரதமர் திரு. பபண்ட்ரோவிக்கை அழைத்திருக்கிருர்.

### விஜயவாடாவுக்கு பொலிஸ்படை

புதுடில்லி, ஜூன் 16

விஜயவாடாவில் ஏற்பட்ட தீ வைப்பு சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு புதிய பொலிஸ்படை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஊர் காவல் படையும் இயங்கிவருகிறது.

### விநோபாஜி உடல்நிலை

புதுடில்லி, ஜூன் 16

சுகவீனமுற்ற ஆச்சார்யா விநோபாஜி நேற்றிரவு நன்ருக உறங்கினுர் என்றும், முழு ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தப்பட்டிருக்கிருர் என்றும் கூறப்பட்டது.

பிரதமமந்திரி திரு. சாஸ்திரி இன்று வார்தாவுக்கருகில் அவரைச் சந்தித்துப் பேசுவார்.

### பாகிஸ்தானில் 20 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 16

மேற்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட பெருமழை காரணமாக 20 பேர் மாண்டனர் என்றும், பல கால்நடைகள் பலியானதாயும் அறிவிக்கப்படுகிறது.

### கடைசி அணி திரும்பியது

புதுடில்லி, ஜூன் 16

காங்கோவிலுள்ள இந்திய ராணுவத்தின் கடைசிப்பகுதி இந்தியா திரும்பிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### இந்தோனேஷிய கொரில்லாக்கள்

பாங்காக், ஜூன் 16

இந்தோனேஷிய கொரில்லாக்கள் வசபஸ்பெறுவதை மேற்பார்வையிடும் பொருட்டு 2 தாய்லாந்து கோஷ்டிகள் பாங்காக்கிலிருந்து புறப்பட்டன.

### தமிழ்நாட்டில்

புதுடில்லி, ஜூன் 16

ரஷ்ய உதவியுடன் தமிழ்நாட்டில் எண்ணெய் கண்டுபிடிக்கும்பொருட்டு நில ஆராய்ச்சி நடத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று கையெழுத்தாகியது.

### பர்மா இந்தியர்

புதுடில்லி, ஜூன், 16

பர்மாவிலுள்ள இந்தியரை அழைத்துவர விசேஷ கப்பல் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஜூலை மாத மத்திமுதல் நவம்பர் மாத மத்திவரை வாரம் ஒரு கப்பல் போக்குவரத்தும், தினசரி விமானப் போக்குவரத்தும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

### அஞ்சலி

பம்பாய், ஜூன், 16

நேற்று கோடை விடுமுறைக்குப் பின் பம்பாய் ஹைகோர்ட் கூடியபோது, தலைமை நீதிபதி நேருவுக்கு அஞ்சலி செலுத்தினுர். "நவபாரதத்தின் சிற்பி. வரலாற்றுப்புகழ் பெற்றதலைவர்" என்றும் கூறினுர்.

சிக்கிம் மக்கள் ஆலோசனைக் கமிட்டியும் நேருவுக்கு அஞ்சலி செலுத்தியது.

### நினைவுச்சின்னக் கமிட்டி

புதுடில்லி, ஜூன், 16

காலஞ் சென்ற பிரதமர் நேருவுக்கு தகுந்த ஞாபகச் சின்னம் ஒன்று அமைப்பது குறித்து நேற்று புதுடில்லியில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

பிரதமமந்திரி சாஸ்திரி, திரு. காமராஜ, ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஞாபகச் சின்னம் பற்றி ஆராய ஒரு கமிட்டி அமைக்க முடிவு செய்யப்பட்டது. நிதி திரட்டும் விண்ணப்பம் ஒன்றையும் கமிட்டி வெளியிடும்.

### கெய்ரோன் மந்திரி சபை ராஜினமா

புதுடில்லி, ஜூன், 16

பஞ்சாப் முதன்மந்திரி திரு. கெய்ரோன் நேற்றுத் தமது மந்திரிசபையின் ராஜினமாவைக் கவர்னரிடம் சமர்ப்பித்தார். புதிய மந்திரிசபை அமைக்கப்படும்வரை பராமரிப்பு மந்திரி சபையாக இயங்கும்படி கவர்னர் திரு. கெய்ரோனைக் கேட்டுக் கொண்டார்.

நாளை நடைபெறவிருக்கும் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்ட் புதிய முதல் மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் என திரு. காமராஜ் அறிவித்திருக்கிருர்.

### நேபாள மன்னர்

கராச்சி, ஜூன், 16

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் நேபாள மன்னர் மகேந்திரா நேற்று அயூப்கானுடன் பேசினுர். மன்னர் தம்பதிகள் பாகிஸ்தானில் 3 நாள் தங்குவர்.

### தமிழ்மொழிஉபயோகம் விஸ்தரிப்பு

சென்னை, ஜூன் 16

தமிழ் நாட்டில் அரசாங்க அலுவலகங்களில் தமிழ்மொழி உபயோகம் படிப்படியாக அமுல் நடத்தும் திட்டத்தின்படி சென்ற மாதம் 15-ம் திகதியிலிருந்து கடனூர், நாகபட்டினம் ஆகிய பகுதிகளிலுள்ள அரசாங்க அலுவலகங்களில் தமிழ்மொழி உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

### காங்கிரஸுடன் த.தே.கட்சி இணையும்?

திருச்சி, ஜூன் 16

சமீபத்தில் நடந்த தேசியக் கட்சியின் மத்தியகமிட்டி கூட்டத்தில் காங்கிரஸுடன் இணைவது பற்றி ஒருமித்த முடிவுக்கு வர இயலவில்லையென்றும், எனவே ஜில்லா கவுன்சில்களின் கருத்தைக் கேட்டறிவதென முடிவுசெய்யப்பட்டதென்றும் தெரிகிறது.

கட்சி ஸ்தாபகர் திரு. சம்பத், திரு. எம். ஸி. ஸி. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் காங்கிரஸுடன் இணையவிரும்புவதாகக் கூறப்படுகிறது.

# இந்தியாவுக்கு நீர்மூழ்கி கப்பல்கள் கிடைக்கும்

## மேற்குநாடுகள் சாதகம்

புதுடில்லி, ஜூன் 16

அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் பாதுகாப்பு உதவி பெறுவது குறித்து நடத்தும் பேச்சுவார்த்தைகளின் விளைவில் இந்தியாவின் நீண்ட கடற்கரையைப் பாதுகாக்கும் நீர்மூழ்கிகளை அளிக்க மேற்கு வல்லரசுகள் சித்தமாக இருக்கின்றன என்று இங்கு நம்பகமாகத் தெரிகிறது.

பாதுகாப்பு உதவி பற்றி வந்துள்ள அமெரிக்க அறிவிப்பில் மேற்கூறிய விபரம் கூறப்படவுமில்லை. அதுபற்றி எவ்வித அதிகாரபூர்வமான அறிக்கையும் வெளியிடப்படவுமில்லை. ஆனல் இந்தியக் கப்பற்படையின் பயிற்சிக்கு ஒரு நீர்மூழ்கியை அளிப்பதற்கு உள்ளுக்குள் பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்மூழ்கிகள் தேவை என்பது தற்போது உறுதிப்பட்டு விட்டதால், நீர்மூழ்கியைத் தாக்கும் விமானங்கள் நிறைய வேண்டும் என்று கேட்கப்படுகிறது. அத்துடன் பல நவீன போர்க்கப்பல்களும் கேட்கப்படுகின்றன.

இதற்கிடையில் பாதுகாப்பு மந்திரி சவான் ரஷ்யா செல்வதற்கான திகதியை முடிவு செய்ய மாஸ்கோவுக்கும், புதுடில்லிக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

# "லாவோஸ், வியட்னமில் கம்யூனிஸ்டுகளை அடக்குவோம்"

## அமெரிக்க வெளி மந்திரி டீன்ரஸ்க் எச்சரிக்கை

வில்லியம்ஸ், ஜூன் 16

தென்கிழக்கு ஆசியாவை கம்யூனிஸ்ட்டுகள் ஆக்கிரமித்துக் கொள்வதை சகித்துக் கொண்டிருக்க முடியாது என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் கூறினுர்.

"தென் வியட்னமிலும், லாவோஸிலும் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் செலுத்துவதை விரும்பமாட்டோம், அடாபிடித்தனம், ஆக்கிரமிப்பு, ஏமாற்று வித்தைகள் ஆகியவற்றின் மூலம் கிடைப்பதை அடித்துக் கொண்டு போக முடியாது என்பதை உலகம் முழுதும் கம்யூனிஸ்டுகள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்" என்றும் திரு. ரஸ்க் கூறினுர்.

"லாவோஸ் மக்களும், வியட்னம் மக்களும் மற்ற நாடுகளின் மக்களும் சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர். ஆகவே நாங்கள் அவர்களைக் கை விட்டுவிட மாட்டோம் எனவே தென்வியட்னமையும், லாவோஸையும் பாதுகாப்போம், இவற்றில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால் தென் கிழக்கு ஆசியாவின் மற்ற இடங்கடி அபாயத்துக்கு உள்ளாகிவிடும். அவற்றைப் பாதுகாக்க பெரும் பணத்தையும், உயிரையும் விரயம் செய்ய வேண்டியாகிவிடும், ஆகவே லாவோஸ், தென்வியட்னம் ஆகிய இடங்களிலேயே கம்யூனிஸ்டுகளை கட்டுப்படுத்திவிடுவது நல்லது" என்றும் ரஸ்க் கூறிப்பிட்டார்.

### சீன கண்டனம்

யு. எஸ். வேவு விமானங்கள் லாவோஸ் மீது பறப்பது சட்டபூர்வமானது என இளவரசர் சுவர்ணபூமா அறிவித்ததை நவசீன செய்தி ஸ்தாபனம் கண்டனம் செய்தது.

# பதட்லாவ் பரிதவிப்பு

## கடும் அமெரிக்க தாக்குதலின் விளைவு

சிங்கப்பூர், ஜூன் 16

லாவோஸ் நடுநிலைமைத் துருப்புக்கள்' சமீபத்தில் ஜார் சமவெளியில் நடைபெற்ற சண்டையில் கம்யூனிஸ்ட் துருப்புக்கள் முறியடிக்கப்பட்டபோதிலும், அமெரிக்காவின் உதவி காரணமாக நடுநிலைமைத் துருப்புகளுக்குப் புதிய தெம்பு ஏற்பட்டிருக்கிறது. பதில் தாக்குதலுக்கு நடுநிலைமையினர் ஏற்பாடுசெய்து வருகின்றனர். எனவே வட வியட்னமிலிருந்து பதட்லாவோ துருப்புக்களுக்கும் ஏராளமான உதவிப் படைகளும் ஆயுதங்களும் அனுப்பப்படுகின்றன.

விமானத்தாக்குதல் கடுமையாகிக்கொண்டிருப்பதால், பதட்லாவோ கட்சியினர் பீதியடைந்துள்ளனர். போர் நிறுத்தத்துக்குத் தயாராய் இருப்பதாகக்கூட மறைமுகமாக அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள்.

இதுவரை சீனர்கள் பின்னல் இருந்துகொண்டு பதட்லாவோவுக்கு உதவிபுரிந்து வந்தனர். நிலைமை மோசமாகி வருவதால் அவர்கள் பகிரங்கமாக உதவிசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவருகிறது.

ஜார்ஸ் சமவெளியில் உள்ள காங்கே என்னுமிடத்தில் யு. எஸ். விமானங்கள் குண்டு வீசியதில் ஒரு சீன அதிகாரி கொல்லப்பட்டதாயும், அந்த அதிகாரியின் இறுதிச்சடங்கில் பதட்லாவோ தலைவர் சுவன்னவாங் கலந்துகெண்டதாயும் சீன அயல்நாட்டு மந்திரிக்கு அவர் அனுதாபச்செய்தி அனுப்பியதாயும் நவசீன செய்தி ஸ்தாபனம் கூறியதாக பாரிஸ் செய்தியொன்று கூறுகிறது.

### சாஸ்திரி மந்திரிசபையில் 51 பேர்

புதுடில்லி, ஜூன் 16

சாஸ்திரியின் மந்திரிசபையில் இப்போது 16 கெபினட் மந்திரிகளும், 15 துணை மந்திரிகளும், 20 உதவி மந்திரிகளும் ஆக மொத்தம் 51 பேர் இருக்கிருர்கள்.

### இந்திரா 28-ந் திகதி பதவி ஏற்பார்

புதுடில்லி, ஜூன் 16

தகவல் ஒலிபரப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீமதி இந்திராகாந்தி இம்மாதம் 28-ந் திகதி, நேரு காலஞ்சென்ற ஒரு மாதத்திற்குப்பின் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்வார் எனத் தெரிகிறது. ஒரு மாத துக்க காலத்தின் போது புதுப் பொறுப்பு எதையும் அவர் மேற்கொள்ள விரும்பாததே தாமதத்துக்குக் காரணம் என கூறப்படுகிறது.

### ஆப்பிரஹாம் கேரள காங்கிரஸ் தலைவர்

எர்ணுகுளம், ஜூன் 16

கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவராக திரு. கே. ஸி. ஆப்ரஹாம் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 112 ஓட்டுகளும், அவரை எதிர்த்த திரு. சாக்கோவுக்கு 70 ஓட்டுகளும் கிடைத்தன.

# "பாதுகாப்பு சபைக்கூட்டங்கள் பீலிக்ஸ் வீட்டிலிலும் நடந்தன"

## புரட்சி சதிவழக்கு விசாரணையில் முன்னுள் இராணுவ தளபதி

கொழும்பு, செவ்

புரட்சி சதி வழக்கு எதிரிக ளில் கேர்னல் டீ மெல்லிடம் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது மேஜர்ஜெனரல் விஜயக்கோன் கூறினர்.

புரட்சிசதி வழக்கு நேற்று காலை தொடர்ந்து விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது மேஜர் ஜெனரல் விஜயக்கோன் சாட்சியமளித் தார்.

13-வது எதிரி கேர்னல் மைத்தைஸ், 19வது எதிரி ரீ வி. விஜயசிங்கா, 20வதுஎதிரி எல். சி. எஸ். சேரசிங்கி ஆகி யோர் சார்பில் நேற்றைய விசாரணையின்போது வைத் திய அத்தாட்சிப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் தொ டர்ந்து குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதா வது: உத்தியோகத்தர் என்ற முறையில் மெல்லிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. இதேபோல மற்ற உத்தியோ கத்தர்களான சேரம், மைத் தீஸ், ஏப்ரகாம், ஜேசுதாசன் ஆகியோர்களிடமும் மரியாதை உண்டு. சில சூழ்நிலையின் கார ணமாக, மெல உத்தரவுகளை தரக்கூடிய நிலையிலிருந்தார். இராணுவப் பயிற்சி நிலைய இன்ஸ்பெக்டராக மெல் நிய மிக்கப்பட்டிருந்தார். பயிற்சி சம்பந்தப்பட்ட உத்தரவுக ளையே அவர் வழங்கக் கூடிய தாயிருந்தது. எல்லா விஷயங் களிலும் உத்தரவு கொடுக்க அவருக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கவில்லை. இராணுவ சேவையிலிருந்து 1954ம்ஆண்டு சேரம் ஓய்வு பெற்றுர். சேரத் திற்குக்கீழ் ஏப்ரகாம் கடமை யாற்றினரா என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை. மேஜர் லோயலா, மேஜர் வைட் ஆகி யோர் சேரத்திற்கு கீழ் கடமை யாற்றினர்கள்.

தற்பொழுதுள்ள அரசாங்கம் பதவிக்கு வந்தபின் கட்டுப் பாட்டு அறை அலரிமாளி கைக்கு இடமாற்றம் செய்யப் பட்டது. தற்காப்பு படை பிர தமரின் மேற்பார்வையில் கட மையாற்றியது. தற்காப்பு, பாது காப்பு, சபைகளின் கூட்டங் கள் திரு. பீலிக்ஸ் டயஸ் பண் டாரநாயக்கா வீட்டில் நடை பெற்றன. அவரது காரியால யத்திலும் பாதுகாப்பு அமைச் சின் நிரந்தரக்காரியதரிசியின் காரியாலயத்திலும் கூட்டங்கள் நடைபெற்றன. அதிகமான கூட்டங்களுக்கு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தலை மைதாங்கினர். பாராளுமன்ற காரியதரிசியான திரு. டயஸ் பண்டாரநாயக்காவிற்கு பிரத மர் அதிகாரம் வழங்கியிருந் தார்.

---

## சேலம் ஜில்லா இரண்டாகும்

கோவை, ஜூன் 16

சென்னை ராஜ்யத்திலேயே பெரிய ஜில்லாவான சேலம் 1965 ஏப்ரல் முதல் திகதி யிலிருந்து இரண்டாகப் பிரிக் கப்படும் என முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் இங்கு கூறினர்.




## இருதுண்டாகி மாண்டார்

கொழும்பு, செவ்வாய்

நேற்றிரவு கொழும்புக் கோட்டை ரயில் நிலையத் திலிருந்து காங்கேசன்துறைக் குப் புறப்பட்ட மெயில் ரயி லில் கடைசி நேரத்தில் ஏறுவ தற்கு முயற்சிசெய்த ஒருவர் ரயிலின் கீழ் அகப்பட்டு இரண்டு துண்டாகி பரிதாப கரமான முறையில் மாண் டார்.

கொழும்பு நில அபிவிருத்தி இலாகாவைச் சேர்ந்த வீரத் துங்கா என்னும் குமாஸ்தா தான் மாண்டவர் என பொலி சார் அடையாளம் கண்டனர்.

---

## விஞ்ஞானிக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி திரு. கே. கந்தையாவைக் கௌரவிக்கு முகமாக கரணவாய் வடக்கு சைவவித்தியாசாலையில் இம் மாதம் 21-ந் திகதி மாலை 6 மணியளவில் இப்பகுதி பொதுமக்களால் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

இவ் வரவேற்பு வைபவத் திற்கு' உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகிப்பார்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், வவுனியா மாஜி எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம், வட பிரதேச உதவி வித்தியாதி பதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோர் சொற்பொழி வாற்றுவரென அறிவிக்கப் படுகிறது.

---

## ரூபாய் நாணயத்தில் நேரு உருவம்

புதுடில்லி, ஜூன் 16

நேருவின் உருவம் பொறிக் கப்பட்ட ஒரு ரூபாய் நாண யங்களைத் தயாரிக்கலாம் என்று பிரதம மந்திரி அலு வலகத்திலிருந்து நிதி அமைச் சுக்கு யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. நாணயத்தின் மறுபக்கத்தில் தேசிய சின் னத்தைப் பொறிக்கவேண் டும் என்றும் கூறப்பட்டிருக் கிறது. இப் பிரேரணை ஏற் றுக்கொள்ளப்படுமானுல் தற் காலத்தில் இவ்வாறு கௌர விக்கப்படும் முதலாவது இந் தியர் அமரர் நேருவாகவே இருப்பார்.

---

## வேத சிவாகம விஸ்வ வித்தியா பீடம்

சிலாபம், செவ்.

வேத சிவாகம விஸ்வ வித் தியாபீட வகுப்பு வைகாசி மீ 30-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை முன்னேஸ்வரம் தேவஸ் தானத்தில் சுவாமி சந்நிதான த்தில் ஆரம்பமாயிற்று. பிர வேசப் பரீட்சையில் சித்திஎய் திய மாணவர்கள் பிராரம்ப வகுப்பில் அனுமதிக்கப்பட் டார்கள். இருவருடங்கள் பயி ற்சி பெற்றபின்னர் இவர்கள் பிராரம்ப பரீட்சையில் தோற் றுவார்கள்.

ஜி. ஸி. ஈ. பரீட்சையில் தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இருபாடங்களிலும் சித்தி எய்திய அர்ச்சகச் சிறுவர்களை பிரவேசப் பரீட்சை இல்லா மலே சேர்த்துக்கொள்வ தான சலுகை ஆனி மாதம் 30-ந் திகதிவரை நீடிக்கப் பெற்றுள்ளதென வித்தியா பீடம் அறிவித்துள்ளது.

---

## ராஜு உடல்நிலை

சண்டிகார், ஜூன் 16

ஆந்திரபிரதேச கல்வி மந்திரி திரு. பி. வி. ராஜு இன்னும் பிரக்ஞையற்றிருக் கிறார். ஆனல் அவருடைய உடலைத் தொடும்போது அவ ருக்கு உணர்ச்சி இருப்பதா கத் தெரிகிறது. உடல்நிலை திருப்திகரமாய் இருப்பதாயும் ஏற்கனவே தெரிவிக்கப்பட் டுள்ள அபிவிருத்தி தொடர் ந்து காணப்படுகிறது என் றும் வைத்திய அறிக்கை கூறுகிறது.

# "புற்றுநோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்துக்கு அவசியமே"

## டாக்டர் சந்திரசேகரா கருத்து

சுழிபுரம், செவ்வாய்

"யாழ்ப்பாணப் பகுதியில் புற்றுநோயாளர்களின்தொகை அதிகரித்தவண்ணமிருக்கின் றது. இவர்களுக்குத் தேவை யான நவீன சிகிச்சை வசதி கள் எதுவும் இங்குள்ள வைத் தியசாலைகளில் இல்லை. இத ஞல் புற்றுநோயால் பீடிக்கப் படுவோர் பெரிதும் வருந்து கின்றனர். இங்கிருந்து மஹர கமவிலுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு நோயா ளர்களை அனுப்பி வைப்பது இலகுவல்ல. எனவே கூடிய விரைவில் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலைய மொன்று நிறுவப்பட வேண் டும். தேர்ச்சிபெற்ற வைத்திய நிபுணர் ஒருவர் இங்கு நிரந் தரமாக நியமிக்கப்பட வேண் டும்" என்று சமூகஜோதி சி. தியாகராசா யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவா ரணசங்கத்தினுல் அளிக்கப் பட்ட தேநீர் விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். இலங்கைப் புற்றுநோய் நிவா ரண சங்கத் தலைவர் டாக்டர் எம். ஜே. ஏ. சந்திரசேகரா வைக் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற இத்தேநீர்விருந்து வைபவத்திற்கு டாக்டர் வி. ரி. பசுபதி தலைமை வகித்தார்.

டாக்டர் சந்திரசேகரா பேசு கையில் புற்றுநோயாளர்களுக் குப் புனர்வாழ்வளிக்கும் பணி யிலீடுபடக் கிராமங்கள்தோ றும் சமூகத் தொண்டர்கள் முன்வர வேண்டுமென்றுர். இலங்கைப் புற்றுநோய் நிவா ரணசங்கம் கடந்த 16 ஆண்டு களாக ஆற்றியுள்ள பணிகளை விபரமாக எடுத்துரைத்த அவர் யாழ்ப்பாணத்தில் புற்று நோய் சிகிச்சை நிலையமொன்று நிறுவப்பட வேண்டியது மிக வும் அவசியமென்றுர். டாக்டர் ஏ. ஈ. ஏ. யோசப் பேசுகை யில் வடபகுதியில் புற்றுநோய் தீவிரமாகக் காணப்படுவதால் இங்கு புற்றுநோய்த் தடைப் பிரசார இயக்கத்தினர் தீவிரப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

வடபகுதி சுகாதர சேவை அதிபர் டாக்டர் ஜி. என். ஆர். நதானியல் உட்பட வேறு பல ரும் பேசினர். திரு கே. ரி. முத்தையா நன்றி கூறினர்.

# பாராளுமன்றத்தைக் கைப்பற்றும் எண்ணம் மூட நம்பிக்கையாம்

## நெல்லியடியில் சண்முகதாசன் உபதேசம்

உடுப்பிட்டி, செவ்

"இலங்கையில் எல்லோருக் கும் வாக்குரிமை கொடுத்த தால் மக்கள் மத்தியிலே நாம் பாராளுமன்றத்தைக் கைப்பற் றலாம் என்ற மூடநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. யார் கையில் அதிகாரம் உள்ளது என்பதை மாணவர்கள் நன்கு உணர வேண்டும். சமுதாயத்தை மாற் றியமைக்க வேண்டுமென்ற

(5-ம் பக்கம்பார்க்க)

**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3 Shows. Sats & SunsFour
Donald Sinden
& Peggy Cummins
in
**Your Money or Your Wife**
(Adults Only)

**இப்பொழுது திரையிடப்படுகிறது !**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| ராஜ் (நீர்கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) |

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

| | | |
|---|---|---|
| ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) | ஜூப்பிட்டர் (குருணகலை) | தாஜ்மஹால் (கல்முனை) |

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
**நானும் ஒரு பெண்**

# வந்தாறுமூலை மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றது

மட்டக்களப்பு, செவ்.

வித்தியாபகுதியின் ஆதரவில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக் கிடையே ஆண் பெண் இரு பாலாருக்குமாக நடத்தப்பட்ட உடற் பயிற்சி போட்டியில் பெண்கள் மத்திய பிரிவு தவிர்ந்த ஏனைய சகல பிரிவுகளிலும் வந்தாறுமூலை மத்தியமகா வித்தியாலயக் கோஷ்டிகள் முதலிடங்களைச் சுவீகரித்து வெற்றிவாகை சூடினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த 12 பாடசாலைகளின் சார்பில் சுமார் எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர்.

**வெற்றியீட்டியவர்கள்**

சகல பிரிவுகளிலும் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

ஆண்கள்சிரேஷ்டபிரிவு: முதலிடம்; வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம். ஏனைய கல்லூரிகள் கலந்து கொள்ளவில்லை.

மத்தியபிரிவு: முதலிடம்; வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் பெரிய கல்லாறு மகா வித்தியாலயம், மூன்றாமிடம் கீத்தான்குடி மகா வித்தியாலயம்.

கனிஷ்டபிரிவு: வந்தாறுமூலை மகாவித்தியாலயம், இரண்டாமிடம் காத்தான்குடி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் அரசடி மகா வித்தியாலயம்.

பெண்கள் சிரேஷ்ட பிரிவு: முதலிடம் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம், இரண்டாமிடம் அரசடி மகா வித்தியாலயம்.

மத்தியபிரிவு: முதலிடம் சென். சிசீரியா கொன்வெண்ட், இரண்டாமிடம் வந்தாறுமூலை மகா வித்தியாலயம்.

கனிஷ்டபிரிவு: வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் கோட்டமுனை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, மூன்றாமிடம் கல்லடி உப்போடை இ. கி. ச. பெண்கள் பாடசாலை.

# "குழந்தைகளிடம் ஆத்மீக சக்தியை வளர்க்கலாம்"

— சாவகச்சேரி எம். பி.

உடுப்பிட்டி, செவ்.

"யூதர் போராட்டத்தில்முன்னூற்றுக்கு மேற்பட்டகப்பலில் வந்த யூதர்களை சைப்பிரசில் கைதிகளாக இறக்கியபோது 16 வயதுச் சிறுமியொருத்தி சிறுவர்களின் ஆதரவைத் திரட்டி உண்ணவிரதமிருந்து அவர்களைக் காப்பாற்றினள் என்று வரலாறு கூறுகிறது. குழந்தையிடமும் ஆத்மீக சக்தியை வளர்க்கலாம் என்பதை இச்சம்பவம் நினைவுறுத்துகிறது"

வாணி கலைக்கழக தென்மராட்சிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்ட சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:

சுதந்திரப் போராட்டத்திற்காக ஆத்மீக சக்தியை வளருங்கள். குழந்தை முதல் யாவரும் ஆத்மீக சக்தியைப்பின் பற்றினல் நிச்சயம் விடிவுண்டு தற்போதைய அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கை தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளது. தன்மானமுள்ள ஒவ்வொருவனும் இதை முற்ருகக் கண்டிக்க வேண்டும்"

பண்டிதர் க. வீரகத்தியும் பேசினர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம்செய்திஅனுப்பியிருந்தார்.

திரு. தம்பு நன்றிகூறினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

புதன் 17-6-64

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 உதயகீதம், 6-50 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்ரகானம், 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைகானம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 நேயர் விருப்பம், 7-15 பேச்சு, 7-30 வயலின்-பரமேஸ்வரி சுவாமிநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு— ஜி. பழனிவேல், 10-15 தேர்ந்த இசை.

## சுகாதாரவார போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, செவ்வாய்

மக்கள் சுகாதாரவாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சுகாதாரப்பகுதியினரும் நகரசபையினரும் கூட்டாகச் சேர்ந்து கடந்த ஒருவார காலமாகப் பல்வேறு நிகழ்ச்சிகளையும் போட்டிகளையும் நடாத்தினர். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. காங்கேசுவை தலைவராகவும், சுகாதாரப் பரிசோதகர் திரு. பொ. சிவராமலிங்கத்தைச் செயலாளராகவும் கொண்ட விசேஷ செயற்குழு சகல நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்திருந்தது.

சுகாதாரவாரத்தை யொட்டி நடாத்தப்பட்ட பல்வேறு போட்டி முடிவுகள் வருமாறு:

**ஆரோக்கியமானதாய்**

புளியந்தீவு- முத்துலிங்கம் மாரிமுத்து (வயது 36) கல்லடித்தெரு, முத்தையா செல்லம்மா (வயது 35) மட்டக்களப்பு.

**கோட்டமுனை**

செல்வராசா முத்தம்மா (வயது 30), இராஜதுரை இராஜேஸ்வரி அமிர்தகளி.

**புஷ்டியான குழந்தை**

புளியந்தீவு- ஜோசபின் பெனடிக்ற், நாகேஸ்வரன் முத்துலிங்கம்.

**வர்த்தக ஸ்தாபனங்கள்**

சிறந்த போசனசாலை- றஷீதியா ஹோட்டல், ஆட்லன்ட்ஸ ஹோட்டல். விசேடபரிசு- கிருண்ட் ஈஸ்டன் ஹோட்டல்.

**பாண்சாலை**

நியூஎம்பயர் பேக்கரி.

**சிகைஅலங்காரநிலையம்**

இம்பீரியல்சலூன், நீகல் சலூன் கோட்டமுனை.

**ஊர்வலம்**

பாடசாலைகளுக் கிடையே நடாத்தப்பட்ட சுலோக அட்டை ஊர்வலப் போட்டி- உயர்தர பாடசாலைகள்- வின்சன் மகளிர் கல்லூரி, அரசடி பாடசாலை. கனிஷ்டபாடசாலைகள்- தாண்டவன்வெளி ஆண் பாடசாலை, அமிர்தகளிகலவன் பாடசாலை.

**பேச்சுப்போட்டி**

ஆண்கள்- ஐ ஹரிச்சந்திரன், அர்ச் மைக்கல் கல்லூரி. எஸ், ஜீவநாயகம், மத்தியகல்லூரி. பெண்கள்- சிசீலியா செபஸ்தியன், அர்ச். சிசீலியா கொன்வென்ட். கலாவதி சிவலிங்கம், வின்சன் மகளிர் பாடசாலை.

இப்போட்டிகளில் பரிசுபெற்றவர்களுக்கு சனிக்கிழமை மாலை நகரமண்டபத்தில் நடைபெற்ற கலைவிழாவில் திருமதி இராணி திஸவீரசிங்கம் பரிசுகளை வழங்கினர்.

## யாழ்ப்பாண இந்துக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி 7 விக்கட்டுகளால்வெற்றி பெற்றது.

இந்துக் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் எட்டு விக்கெட் நஷ்டத்திற்கு 165 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு மிகுதி ஓட்டங்களையும் எடுத்த பின் ஆட்டத்தைநிறுத்தியது பரமேஸ்வரா கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 136 ஓட்டங்களையும், இரண்டவது ஆட்டத்தில் 79 ஓட்டங்களையும் பெற்றது. இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பாலேந்திரன் திறமையாக விளையாடி 55 ஓட்டங்களைப் பெற்ருர்.

## யாழ். மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், கனகரத்தினம் வித்தியாசாலைக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 104 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 178 ஓட்டங்களையும் பெற்றது. கனகரத்தினம் வித்தியாசாலை முதலாவது ஆட்டத்தில் 46 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 119 ஓட்டங்களையும் பெற்றது. கங்காதரன் ஆட்டமிழக்காமல் மிகத்திறமையாக விளையாடி 101 ஓட்டங்களைப் பெற்ருர்.

---

பண்டாரவளை, செவ்.

கடந்த இரண்டு கிழமையாக வெங்காயம் இங்கு கவனத்திற்குரிய ஒரு பொருளாகக் காட்சி தருகிறது. ஒரு றூத்தல் வெங்காயம் ஐக்கிய பண்டகசாலையில் 42 சதமாக விற்கப்பட்டது.

அரசாங்கச் சந்தை உற்பத்திப் பகுதியினரிடமிருந்து நூற்றுக்கணக்கானறூத்தல் வெங்காயம் ஒருசில நிமிடங்களிலே விற்பனையாகியது.

தனியார் கடைகளில் ஒரு இறுத்தல் வெங்காயம் 80 சதமாக விற்கப்படுகிறது.

## பாராளுமன்ற . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவா வாலிபர்களிடையேதான் உள்ளது, 20 வருடகாலமாகக் கஷ்டப்பட்டுத்தான் சீனவில் செம்படை திரட்டிப் புரட்சி கண்டார்கள். கியூபா முதலிய நாடுகளின் புரட்சிகளும் இளைஞர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடியன"

நெல்லியடிகம்யூனிஸ்ட் வாலிபர் சங்க விசேஷ கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை தொழிற்சங்க சம்மேளனச் செயலாளர் திரு. நா. சண்முகதாசன் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

"கடந்த மூன்று மாதகாலமாக பாராளுமன்றம் நடைபெறுமல் இருந்தபோது ஆட்சியில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை. அரசாங்கஇயந்திரங்களான பொலிஸ், இராணுவ படைகளின் உதவியால் ஆட்சி நடைபெறத்தான் செய்தது. எனவே அமைதியான ஆட்சிக்குப் பாராளுமன்றம் முக்கியமல்ல.

தனிப்பட்ட முதலாளிகளின் சொத்துக்களையும், கௌரவத்தையும் பாதுகாக்கவே இன்றைய பொலிஸ்படை உதவுகிறது.தொழிலாளியொருவனின் நலத்திற்காக அவைபாடுபடுவதில்லை.

பட்டாளத்தைக் கைப்பற்றினல்தான் தொழிலாள வர்க்கம் உயர முடியும்"

இக்கூட்டத்திற்கு கரவை கந்தசாமி தலைமை வகித்தார்.

## பெண் உத்தியோகஸ்தர்கள் தேவை

இன்ஸ்யூரன்ஸ் அலுவலகத்தில் குமாஸ்தாவாகக் கடமை ஆற்றுவதற்கு டைப்றைட்டர் மூலம் டைப்பண்ணுவதற்கு சான்றுப் பத்திரம் உள்ள தமிழ், ஆங்கிலம், கணிதம் நன்கு தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

தராதரம்:- எஸ். எஸ். ஸி. மூன்று பாடங்களுக்குமேல் சித்தி அடைந்தவர்கள்.

வயது:- 18 வயதுக்கும் 25-வயதுக்கும் உள்.

பிணைப்பணம்:- 2,500 ரூபா.

சம்பளம்:- 150 ரூபா.

விண்ணப்பம் அனுப்பும் கடைசி திகதி:- 21-6-64 - க்கு முன்.

இன்ஸ்யூரன்ஸ் அலுவலகத்தில் தங்கியிருக்கக் கூடியவராக இருக்கவேண்டும். உணவு இலவச இடவசதியும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பம் அனுப்பிய யாபேரும் 22-6-64 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டும். விண்ணப்பப் பத்திரம் பதிவுத் தபால் மூலம், பாவிக்கப்படாத 10சத இரு முத்திரையும் வைத்து அனுப்பப்பட வேண்டும்.

இங்ஙனம்,
இன்ஸ்யூரன்ஸ் பதிவுரிமையாளர்.

இன்ஸ்யூரன்ஸ் அலுவலகம்,
32, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம். 398

## இறந்த குழந்தை காணப்பட்டது

காங்கேசன்துறை, செவ்.

தாவடியிலுள்ள தோட்டமொன்றில் இறந்த ஏழுமாதக் குழந்தை ஒன்றைச் சுன்னுகம் பொலிஸார் கண்டெடுத்துக் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

மரணவிசாரணை அதிகாரி டாக்டர் வேதாரணியம், குழந்தை கொலை செய்யப்பட்டிருக்கிறதெனத் தீர்ப்பளித்தார். குழந்தை ஆஸ்பத்திரி மயானத்தில் புதைக்கப்பட்டது. இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## ஞாபகதின கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூகநிலைய அங்கத்தினரால் திரு. முத்தையா பிலிப்புவுடைய மகன் ஜகநாதனின் முதல்வருட நினைவையொட்டி மேற்படி பாஷையூர் சனசமூக நிலையத்தில் ஓர் உருவப்படமொன்று பாஷையூர் கட்டளைக்குரவரும், ஞானப்பிதாவும் ஆகிய வண பிதா எ. வசன்பெக் ஓ. எம். ஐ.யால் திரைநீக்கம் செய்யப்பட்டது. திரு. ஜெகநாதனின் திடீர் மரணத்தை நினைவு கூறும் வண்ணம் வண. பிதா எ. வசன்பேக், திரு. அ. போல் ராஜ் ஆ. மாடீன், ஆகியோரும் பேசினர்.

## காரியதரிசியாக கொல்வின்

### கட்சி தேர்ந்தெடுத்தது

கொழும்பு, செவ்வாய்

சமசமாஜக்கட்சியின் காரியதரிசியாக டாக்டர் கொல்வின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் மத்திய குழு ஞாயிற்றுக்கிழமை இரவு கூடியபோதே இவ்வித முடிவு செய்யப்பட்டது.

சென்ற வாரம் கட்சியின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருந்த டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாகப் பொறுப்பேற்றிருக்கும் தமக்கு அதிகவேலைகள் இருப்பதால் கட்சியின் காரியதரிசியாக தொடர்ந்து இருப்பது சாத்தியமாக இராது என அறிவித்ததைத் தொடர்ந்தே டாக்டர் கொல்வின் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

மண்டைதீவில் (யாழ்ப்பாணத்திலிருந்து 1½ மைல்) போக்குவரத்து சௌகரியமான இடத்தில் 100 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடுகள் கட்ட வசதியான இடம். பகுதி பகுதியாகவோ அல்லது மொத்தமாகவோ விற்கப்பெறும். விபரங்களுக்கு:- க. செல்வநாயகம், மானிப்பாய். 523

---

வெட்போர்ட் வான் 33ஸ்ரீ5700 தொடர் 15 அந்தர் மரபொடி நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. நேரில் கலந்துகொள்ளவும். U. M. ஐதுறூஸ், 65, ஜின்ன ரோட், யாழ்ப்பாணம். டெலிபோன் 7215. 522

---

நல்ல நிலைமையிலுள்ள EL தொடர் இலக்க போர்ட் கொன்ஸல் (Ford Consul) விற்பனைக்குண்டு. ஒரே சொந்தக்காரராலேயே செலுத்தப்பட்டு குறைந்த கட்டைகள் ஓடியது. பார்வையிடலாம்.

துரைராசசிங்கம், ஸ்ரேஷன் ரோட், சாவகச்சேரி, 521

---

**தேவை**

யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. 3 சதவீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100-00 கட்டுப் பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

---

**உள்நாட்டுத் தயாரிப்புகள்**

"மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு" என்று கூப்பாடு போடுங் காலத்திலே சிறந்த உள்நாட்டுத் தயாரிப்புகளை உங்களுக்கு குறைந்தவிலையில் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அ. க. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 290

---

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெய்ன் ஓயில்

சகல நோவு, வீக்கம். வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்,

தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273


## கைதாகி விடுதலை

காங்கேசன்துறை, செவ்.

'காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்தைச் சேர்ந்த திரு. ம. விசுவநாதன் என்பவர் அதிகாலையில் எழுந்து வெளியே சென்றபோது சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் பேரில் காங்கேசன்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் புகையிரத நிலையத்திற் கடமையாற்றும் உயர் அதிகாரி ஒருவர் பொலிஸ் நிலையம் சென்று அவரை அடையாளம் கண்டதன் பேரில் மாலை 5மணிவரையில் அவர் விடுதலையானர்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# தர்மபுரத்தில் சிரமதானமூலம் பாதை அமைக்க முயற்சி

## காணி எடுத்தவர்களுக்கு வசதி செய்ய பெற்றார் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் தர்மபுரத்தில் காணி எடுத்தவர்கள் பலருக்கு அவர்கள் காணி திருத்தவில்லை யென்ற காரணத்துக்காக காணியைக் காலிசெய்யுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக அறியப் படுகிறது.

தர்மபுரத்தில் உள்ள காட்டுக் காணிகள் போக்குவரத்துப் பாதைகளில்லாததால் திருத்தப்படவில்லை யென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிரமதானம்மூலம் பாதை அமைப்பதற்கு யாழ்ப்பாணம் பெற்றார் சங்கம் முயற்சி செய்து வருகிறது.

இதற்கு முன்னோடியாக தர்மபுரத்திலுள்ள காணிக்காரர்களைக் கொண்ட கூட்டமொன்றை ஞாயிற்றுக்கிழமை காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கூட்டுவதற்கு பெற்றோர் சங்க காரியதரிசி திரு. சி. பொன்னையா ஒழுங்கு செய்துள்ளார். "எமது வருங்காலம் பெரும்பாலும் விவசாயத்தில் தான் தங்கியுள்ளது. எடுத்த காணிகளை விளைநிலமாக்க வேண்டுமென்பதுதான் பெற்றார் சங்கத்தின் கோரிக்கை" என்று திரு. சி. பொன்னையா தர்மபுரத்தில் காணி எடுத்துள்ளவர்களுக்கு அனுப்பிய அழைப்பில் குறிப்பிட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்திற்கு அரசாங்க அதிபர் தலைமை வகிப்பாரென்றும் தர்மபுரத்தில் காணி எடுத்தவர்கள் எல்லோரும் இதில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் திரு சி. பொன்னையா கேட்டுள்ளார்.

## சுகாதாரத்துறையில் முன்னேற்றமாம்

மாவிட்டபுரம், செவ்.

"சுமார் 25 வருடங்களுக்கு முன் இருந்ததைவிட சுகாதாரத்துறையில் நமது நாடு இப்போது வெகுதூரம் முன்னேறி விட்டது. சிசு மரணங்களும், பிரசவ மரணங்களும் பெருமளவில் குறைந்திருப்பது இதற்குப் போதியசான்றாகும். தமக்குள்ள குறைபாடுகளை நீக்க வைத்தியர்களிடம் சென்று ஆலோசனை பெறுவது ஒவ்வொருதாய்மாரதும் முக்கிய கடமையாகும்".

இவ்வாறு காங்கேசன்துறை மாவட்ட அதிகாரி டாக்டர் எம். வேதாரணியம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் வலி-வடக்குச் சுகாதாரப் பகுதியினரால் கொண்டாடப்பட்ட சுகாதார வாரக் கொண்டாட்டத்திற் கலந்து கொண்டு பேசுகையிற் குறிப்பிட்டார். இந்த விழாவுக்கு யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமை தாங்கினார். விழாவிலே பொருட்காட்சியொன்றும் இடம்பெற்றது.

தெல்லிப்பளை சுகாதார ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மருத்துவத்தாதி செல்வி சரஸ்வதி சுப்பையா பேசுகையில்.

மருத்துவ மாதர் சமூகத்தில் எள்ளிநகையாடப் படுபவர்களாக இருக்கும் நிலை மாறவேண்டும் என்றும் அவர்களது சேவை தாய்மை என்னும் ஒப்பற்ற பண்பினையுடைய தாய்க் குலத்துக்கு இன்றியமையாததென்றும் குறிப்பிட்டார்.

காரியாதிகாரி முருகேசம்பிள்ளை, பண்டிதர் குமாரசுவாமி திரு. ஏ. சரணமுத்து ஆகியோரும் பேசினர்.

இவ்விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை டாக்டர் என். ஆர். நதானியல் ஆரம்பித்து வைத்தார். அன்று இரவு நிகழ்ந்த கதம்பக் கச்சேரிக்கு டாக்டர் சி. யே. கன்ற் தலைமை தாங்கினார். திருமதி கன்ற் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசு வழங்கினர்.

## மறைந்த ஆசிரியருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்.

காலஞ்சென்ற ஆசிரியர் க. பே. முத்தையாவின் மறைவு குறித்து, உதயதாரகை இலக்கியமன்றம், நவாலி இளையயற்கழகம் ஆகியவையின் சார்பில், திரு. டி. ஆர். அம்பலவாணர் தலைமையில் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது,

வண. சாம் அல்பிரட் திரு. சி. கணபதிப்பிள்ளை, திரு. என். சுப்பிரமணியம் ஆகியோர் காலஞ்சென்ற ஆசிரியருக்கு அனுதாபம் தெரிவித்து பேசினார்கள்.

## திவ்ய ஜீவன சங்க அனுதாபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் ஞாபகார்த்தமாக ஒரு பிரார்த்தனைக் கூட்டம், யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் இம்மாதம் 20-ம் தேதி மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

திவ்ய ஜீவன சங்க தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் முன்னாள் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், முன்னாள் வவனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

யாழ் மேயர் திரு. ரி. எஸ். துரைராசா, திருவாளர்கள்:— ஆர். என். சிவப்பிரகாசம், எல். ஆர். கனகநாயகம், கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். கனகரத்தினம், எஸ்.எச். எம். சஹிது, யோகிராஜ் சுவாமி சச்சிதானந்ஜி, திருமதி ஏ. அமிர்தலிங்கம், செல்வி புஷ்பா செல்வநாயகம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

—

## எவருமே வரவில்லை!

காங்கேசன்துறை, செவ்

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி விவாதிக்க பட்டின சபைக் கூட்டம் இன்று காலை கூட்டப் பட்டிருந்தது. கூட்டத்தை நடத்துவதற்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு.எஸ். மாணிக்கவாசகர் பட்டின சபைக் காரியாலயத்துக்கு வந்திருந்தார். ஆனால் பட்டின சபைத் தலைவர் உட்பட ஆறு அங்கத்தவர்களும் கூட்டத்துக்கு வரவில்லை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த அங்கத்தவர்கள் கூட சபைக்கு வரவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் சிறிது நேரம் காத்திருந்து விட்டு புறப்பட்டுச் சென்றார்.

## கட்டாய ஓய்வை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகள்

காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா உறுதி அளித்திருந்தபடி 1956-ம் வருடத்துக்குமுன் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள் எந்த மொழியில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களோ அந்த மொழியிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படவேண்டும். அரசகரும மொழியில் அவர்கள் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து அவர்கள் விலக்கப்படவேண்டும்.

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட சகல சம்பள உயர்வுகளும் அந்தந்த ஊழியருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றால்தான் எதிர்காலத்தில் சம்பள உயர்வு அளிக்கப்படும் என்ற நிபந்தனை இருக்கக்கூடாது.

பதவி உயர்வுக்கும் உதவிச் சம்பளம் பெறுவதற்கும் அரசகரும மொழியில் முன் கூட்டியே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கக்கூடாது.

அரசகரும மொழியில் தேர்ச்சி பெறாதகாரணத்தினால் கட்டாய ஓய்வு வழங்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மீண்டும் தொடர்ந்து சேவையாற்ற திருப்பி அழைக்கப்படவேண்டும்.

கட்டாய ஓய்வுக்காக அனுப்பப்பட்டுள்ள நிருபங்களெல்லாம் வாபஸ் பெறப்படவேண்டும்.

வேலை இழப்பதற்கு தகுந்த நஷ்டஈடு கொடுக்கக்கூடிய வகையிலமைந்த ஓய்வு பெறுவதற்கான விசேஷ திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

தண்டனை வழங்கக்கூடிய அதிகாரம் திறைசேரிக்கு இருப்பது ஊழியர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு பெரும் தடையாக இருப்பதாகவே நாம் கூறுவோம் என்றும் சம்மேளனம் நிதிமந்திரிக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

# தாலிக்கொடி வழிப்பறி செய்தவருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், புதன் நல்லூரில் நிகழ்ந்த தாலிக்கொடி வழிப்பறிக் கொள்ளை வழக்கில், எதிரிக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும், 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. 500 ரூபாய் செலுத்தத் தவறினால் மேலும் ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுமராமத்துப் பகுதியில் கடமையாற்றும் திரு வி. சுப்பையாவின் மனைவி திருமதி சரஸ்வதி சுப்பையாவிடமிருந்து கடந்த பெப்ரவரி மாதம் 14-ந் திகதி இரவு தாலிக்கொடியையும், சங்கிலியொன்றையும் வழிப்பறிசெய்ததாக ஆனைப்பந்தியைச் சேர்ந்த கே. வரதராஜா என்ற இளைஞன்மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு நேற்று முன்தினம் மாஜிஸ்திரேட் திரு. அரசவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் கே. வரதராஜாவுக்கு மாஜிஸ்திரேட் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். 500 ரூபாய் செலுத்தத் தவறினால் ஒன்றரை வருடம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

# வடபோர்ணியோவில் மீண்டும் சண்டை

## இன்று வெளிமந்திரிகள் மகாநாடு நடக்கும்

டோக்கியோ, ஜூன் 16

மலேஷியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் வெளிமந்திரிகள் மகாநாடு நாளை டோக்கியோவில் நடைபெறும் என பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

இன்று பிலிப்பைன்ஸ் அதிபர் மகாபகாலை துங்கு சந்தித்தார்.

இதற்கிடையில் வடபோர்ணியோவில் இந்தோனேஷியர்களுக்கும், மலேஷியர்களுக்குமிடையே சண்டை ஏற்பட்டதாகச் செய்தி கிடைத்திருப்பதாயும், இது உண்மையிலேயே வேதனை தரக் கூடிய செய்தி என்றும் துங்கு குறிப்பிட்டார்.

நேற்று அவர் ஜப்பானியப் பிரதமர் இக்கேடாவைச் சந்தித்தார்.

## ஜூலை 2-ல் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளங்கள் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை.

இன்று நடைபெற்ற கூட்டத்தில் யு. என். பி.யைச் சேர்ந்த திரு. டட்லி சேனநாயகா, ஜே. ஆர். ஜெயவர்த்தன, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பீட்டர் கெனமன், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. லெஸ்லி குணவர்த்தன, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், எம். ஈ. பி.யைச் சேர்ந்த திரு. பிலிப் குணவர்த்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரும், சபைமுதல்வருமான திரு. சி. பி. டி' சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

—

## வினோபாவேவை சாஸ்திரி சந்தித்தார்

புதுடில்லி ஜூன் 16

இந்தியப் பிரதமர் சாஸ்திரி இன்று காலை விசேஷ விமானம் மூலம் நாகப்பூருக்குச் சென்று அங்கிருந்து காரில் வார்தா சென்றார். ஆச்சார்யா பாவேயை அவர் சந்தித்தார். பாதை நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று சாஸ்திரியை வாழ்த்தினர்.

நாக்பூரில் திரு. சாஸ்திரி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்துக்கட்டும் பணியில் மக்கள் அரசாங்கத்துக்குப் பூரண ஆதரவு தந்து உழைக்கவேண்டும் எனக் கூறினார். நேருஜியின் விருப்பம் இதுவே எனவும் அவர் சுட்டிக் காட்டினர்.

வார்தாவில் ஆச்சார்யா பாவே தங்கியிருந்த குடிலுக்கு திரு. சாஸ்திரி சென்றபோது வினோபாவே தமது உடல் நிலை சரியாக இல்லாதிருந்த போதும் குடிலுக்கு வெளியே வந்து அவரை வரவேற்றார்.

சுகாதார விழா

# சனசமூக நிலைய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்நகர சனசமூக நிலையங்கள் நடாத்திய சுகாதாரவிழாவில் நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூகநிலையம் முதலிடம்பெற்றது. இதற்குரிய வெற்றிக் கேடயத்தை யாழ்ப்பாண மேயர் திரு தா. ச. துரைராசா வழங்கினர்.

மேற்படி நிலையத்தில் இம்முறை மூன்று தினங்களாக நடைபெற்ற சுகாதாரவாரவிழா இறுதியில் புலவர் கி. சூசைப்பிள்ளை பரிசுகள் வழங்கினர். பலர் சொற்பொழிவாற்றினர், உப செயலாளர் திரு. டா. அன்டனி நன்றியுரை கூறினர்.

### போட்டியில் பரிசுபெற்றோர்

கிணறு சுத்திசெய்தல்: திருவாளர்கள் ஞ. மார்க்கு, அ. நீக்கிலாஸ், தே. விகோரி.

ஒழுங்கை துப்பரவாக்குதல்: திருவாளர்கள் ச. மரியநாயகம், ச. மலக்கியாஸ், அ. தார்சியாஸ்.

தண்ணீர்பைப் சுத்திசெய்தல்: திருவாளர்கள் யோ. பிரான்சிஸ், ஞே. நிக்கிலாஸ், ம. அருமைத்துரை.

குப்பைமேடுகள் மூடுதல்: திருவாளர்கள் அ. வென்சஸ்லாஸ், தி. திருச்செல்வம், அ. கீதம்.

மனைச்சுத்தம்: திருமதி வ. விக்டோறியா.

துப்பரவாகப் பசு வளர்த்தல்: திரு. ம. நீக்கிலாப்பிள்ளை.

துப்பரவாக ஆடு வளர்த்தல்: திரு. வ' பற்றிக்

சிறந்த குழந்தை: அ. சாந்தி.

சிறந்த தாய்: ப. உத்தரியம்.

தீன்பண்டங்கள் துப்பரவாகச் செய்து விற்பனைசெய்தல்: வ. பொன்னு.

நீச்சல் போட்டி: திருவாளர்கள் செ. அறுக்காஞ்சி, ரா. நேசராசா, அ. லுக்கேஸ்.

10 மைல் சைக்கிள் மரதன் ஓட்டம்: திருவாளர்கள் ம. அருமைராசா, ப. சிறில், ஞா. ஜோன்பிள்ளை.

ஒரு மைல் ஓட்டம்: திருவாளர்கள் நீ. அந்தோனிப்பிள்ளை, செ. காணிக்கை, ச. மரியாம்பிள்ளை.

சுகாதாரப் பாட்டு: திரு. ம. டானிசியஸ்.

சுகாதாரப் பேச்சு: திரு. நீ. அருளானந்தம்.

சுகாதார நகைச்சுவைப் பேச்சு: திரு. யோ. சந்தியோகு.

சுகாதார விநோத உடை: திரு. ம. சந்தியோகு.

—

## வண பிதாவுக்கு விருந்து

யாழ்ப்பாணம், புதன்

அர்ச். அந்தோனியாருடைய திருநாளை முன்னிட்டு பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தினரால் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 8 மணியளவில் வணக்கத்துக்குரிய பிதா எ. வசன்பேக் ஓ. எம். ஐ. தலைமையில் இராப்போசனம் அளிக்கப்பட்டது,

நிலையத்தினர் நடத்தியபோட்டியில்வெற்றி பெற்றவர்கள்:

சங்கீதக்கதிரையில் வெற்றி பெற்றவர்: திரு. க. றெஜினோட்.

சொற்கள் ஒழுங்கு படுத்துதல்: திரு. எ. பிலிப்.

பேச்சு: திரு. எ. பிலிப், திரு. ரி. எம். அம்புரோஸ், திரு. எம். வயிற்றஸ், திரு. ஆ. மாட்டீன், திரு. ஜி. ஜி. தேவதாஸ், வண. பிதா. எ. வசன்பேக் ஓ. எம். ஐ.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் .1-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.